DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 48/2026 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| Name | : | **கருப்பையா** |
| Father's Name | : | **கருப்பையா** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர். .)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 16.03.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் உலகினிப்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி ராக்கம்மாள் எனது மனைவி. சாட்சி கல்யாணி எனது தங்கை ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 12, 13 வருடங்களுக்கு முன்பு எனது வீட்டிலிருந்து வாழை மரங்கள், கற்கால்கள் ஆகியவை சேதமாகிவிட்டது. சேதப்படுத்தியது யாரென்று தெரியாததால் நான் மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் மனு கொடுத்தேன். நான் ஆஜர் எதிரியை குறித்து புகார் ஏதும் போலிசாரிடம் கூறவில்லை. எதிரி பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவரை விசாரிக்கும்படி கூறினேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவின் நகல் நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்தது தான். அந்த **புகார் மனு அ.த.சா.ஆ.1** ஆகும். (அசல் புகார் மனு இந்நீதிமன்ற அமர்வு வழக்கு எண்.215/2024

வழக்கில் உள்ளது) போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

1. போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது கடந்த 28.12.2014 ம் தேதி மாலை 5.30 மணியளவில் நானும் எனது மனைவியும் வீட்டிலிருந்தபோது ஆஜர் எதிரியும் மற்றொரு எதிரியான மூக்கையா என்ற சின்னக்கருப்பன் ஆகியோரிடம் கையில் கடப்பாரை மற்றும் அருவாளால் என் வீட்டிற்கு முன்பு போடப்பட்டிருந்த கற்கால்களையும், கம்பி வேலியையும் அறுத்து சேதப்படுத்தினார்கள் என்றும் தடுக்க வந்த என் மனைவியை எதிரிகள் இருவரும் அடித்துக்காயப்படுத்தினார்கள் என்றும் என் வீட்டிலிருந்து வாழை மரங்களையும் அரசால் கட்டிக்கொடுக்கப்பட்ட பாத்ரூம் மற்றும் ரூ.1500/- மதிப்புள்ளவைகளை சேதப்படுத்தினார்கள் என்று போலிசார் விசாரணையிலும் எனது புகார் மனுவிலும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது நானும் எதிரியும் சமாதானம் ஆகி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.16 11:17:33 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**